

SREE SEVUGAN ANNAMALAI COLLEGE

Devakottai-630 303, Sivagangai (Dt),
Tamilnadu, South India

ISBN : 978-81-920469-9-0

தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை
முத்தமிழ்ப் பதிப்பகம், சிவகாசி
தாய்வழி இயற்கை உணவகம், சிவகாசி

இணைந்து நடத்திய
பன்னாட்டுக் கருத்தரங்கம் 20.03.2020

இடம் : ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை



பதிப்பாசிரியர்கள்
முனைவர் "இளம் அறிஞர்" சோ.முத்தமிழ்ச்செல்வன்
முனைவர் இரா. கண்ணதாசன் முனைவர் மு.சு.கண்மணி,
பேரா. வி.முத்தழகு கணேசன், பேரா. ச.இளங்கோ
முனைவர் ச. திருப்பதி

வெளியீடு : முத்தமிழ்ப் பதிப்பகம்,
1/200/டீ12, குருகாலனி, தேவர்குளம் சாலை, சிவகாசி.

# நூல் விவரம்


நூலின் பெயர் : தமிழ் இலக்கிங்களில் வாழ்வியல் சிந்தனைகள் (பன்னாட்டுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : முனைவர் இளம் அறிஞர் சோ.முத்தமிழ்ச்செல்வன்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

முனைவர் இரா.கண்ணதாசன்

முனைவர் மு.சு. கண்மணி

பேரா. வி. முத்தழகு கணேசன்

பேரா ச. இளங்கோ

உதவிப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை, ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

முனைவர் ச .திருப்பதி

தலைமையாசிரியர் (ஓய்வு) தைலாபுரம்.

முதற்பதிப்பு : மார்ச் - 2020

ISBN : 978-81-920469-9-0

பக்கங்கள் : 581

அளவு : டெம்மி 1/8

விலை : ரூ 400/-

வெளியீடு : முத்தமிழ்ப் பதிப்பகம், சிவகாசி

கணினி மற்றும் அச்சகம் : முத்து பிரிண்டர்ஸ், விருதுநகர்.

11. சங்ககால மகளிர் தீப்பாயுதல் - கைம்மை, ஒருபார்வை 76
சூரம் மலர் மன்னன்

12. புதுக்கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள் 80
இரா. ஈஸ்வரி,

13. செ.ஞானனின் "வேறு வழி இல்லை" நாவல் காட்டும் வாழ்வியல் 87
முனைவர் சி.எம்.உமாதேவி

14. முல்லை நில மக்களின் வாழ்வியல் கூறுகள் 95
முனைவர் கா. கணநாதன்

15. வள்ளுவத்தில் நவீன வாழ்வியல் மேலாண்மை 103
முனைவர் வ.கணபதிராமன்

16. பெருமாள் திருமொழியில் உளவியல் சிந்தனைகள் 108
முனைவர் பெ.கணேச முருகன்

17. பாவேந்தர் கவிதைகளில் பாட்டாளி வர்க்கப் போராட்டம் 116
முனைவர் இரா.கண்ணதாசன்

18. சிலப்பதிகாரத்தில் வாழ்வியல் நெறிகள் 125
திரு. இரா.கண்ணன்

19. சிலப்பதிகாரம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் 133
இரா.கவிதா

20. கி.ராஜநாராயணன் படைப்புக்களில் வட்டார மரபுகள் 144
மு.கார்த்திகா

21. செவ்விலக்கியப் பாடல்களில் பண்டமாற்று முறை 152
திரு. சு.காளிமுத்து

22. ஆசாரக்கோவை வரிசையிடும் வாழ்வியல் சிந்தனைகள் 157
முனைவர் இரா.கீதா, மா. ஜனகர்

23. ஞா.சந்திரனின் கட்டுரைகளில் வாழ்வியல் சிந்தனைகள் 165
திரு. பெ.குபேந்திரன்

24. இராமலிங்கர் காட்டும் இனிய வழி 170
தமிழ்க்கொண்டல் ஆ.குமார்

25. குறுந்தொகை மாந்தர்களின் வாழ்வியல் நெறிகள் 174
முனைவர்.சு.சங்கர்தாஸ்

26. நாட்டுப்புறவியலில் சடங்கு முறைகள் 179
முனைவர் மா.ரெத்தினேஸ்வரி, ந.சங்கீதா

27. திருக்குறள் சுட்டும் அறநெறிகள் 187
திரு. கே.சண்முகம்

28. தமிழ் இணையக் கவிதைகளில் - கண்தானம் 192
முனைவர் செ.சு.நா. சந்திரசேகரன்

29. புதுக்கவிதைகளில் விளிம்புநிலை மக்கள் 199
திரு. அ.சந்திரன்

30. இஸ்லாமியர்களின் ஐம்பெரும் வழிபாட்டுமுறைகள் 206
முனைவர் மா.ரெத்தினேஸ்வரி, செ.சபிதாபேகம்

31. ஆசாரக்கோவைகாட்டும் அறங்கள் 214
முனைவர்.பா. சாந்தி

32. தமிழ் இலக்கியங்கள் பகரும் அர்த்தமுள்ள வாழ்க்கைமுறை 221
முனைவர் யா.சாம்ராஜ்

33. "பொன்னீலனின் புதியமொட்டுகள் புதினம் காட்டும் வாழ்வியல்" 225
திருமதி மு.சித்ராதேவி

34. இலக்கியம் வகுத்த வாழ்வியல் 233
ம.சிந்துமதி

35. குறிஞ்சி நில சமூக வாழ்வியல் 241
முனைவர் செ.சுதா

# தமிழ் இலக்கியங்கள் பகரும் அர்த்தமுள்ள வாழ்க்கைமுறை

**முனைவர் யா.சாம்ராஜ்,**

*உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை, ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி, திருப்புத்தூர்.*

மனிதனை ஒழுக்க நெறியில் வழிநடத்தி நல்வாழ்வுக்கு அழைத்துச் செல்வது இலக்கியங்கள் ஆகும். எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை இலக்கியங்கள் தீர்மானிக்கின்றன.

**"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே – வாளொடு**
**முன்தோன்றிய மூத்தகுடி"**

என்னும் பெருமை பெற்றது நம் தமிழ்குடி. மனிதன் பிறந்ததிலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்று இறுதியில் மண்டை மண்ணுக்குள் செல்லும் வரையிலும், மீண்டும் ஒரு வாழ்வு இருக்கிறது, அதுவே மோட்சப் பேரின்ப நிலையாகும். அவ்வகையில் மனிதனின் அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு தமிழ் இலக்கியங்கள் கூறும் நல்லியல்புகள் குறித்து விளக்குவதாய் இக்கட்டுரை அமைகிறது.

**வாழ்வியல் நெறிமுறைகள் :**

மனித வாழ்க்கைமுறையை அகம், புறம் எனப் பகுத்திருந்தாலும், அகமானது களவு, கற்பு எனப்பிரிக்கப்பட்டு,அது வாழ்வின் ஒரு பகுதியாகக் கொள்ளப்படுவதோடு, புறவாழ்க்கையில் அரசியல், சமுதாயநிலை, பழக்கவழக்கங்கள், நாகரிகம், கல்வி, பொருளாதாரம், கலைவளர்ச்சி ஆகியவை மனிதனோடு பின்தொடரக்கூடியதாக இருத்தலை காணலாம். குறிப்பாக,

**"வினையே ஆடவர்க் குயிரே"** என்று கூறும் குறுந்தொகை **"மனையுறை மகளிர்க்கு அவ்வாடவர் உயிரே"** என்று பறையறை செய்து ஆண், பெண் வாழ்விற்கானத் தரமான அடையாளத்தைப் பரிசாக வழங்கி இருக்கிறது.

**நாகரிகம் பண்பாடு :**

"**பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்**" என்கிறது கலித்தொகை. உலகப் பொதுமறையாம் முப்பால,

"**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்அது - இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மண்**"- (குறள் - 996)

என்கிறது. அதாவது பண்புடையவர்கள் வாழ்வதால்தான் இந்த உலகம் இயங்குகிறது. அவர்கள் இல்லை எனில் இந்த உலகம் மண்ணில் புதைந்து அழிந்துவிடும். இதனை இன்னும் கூடுதல் சிறப்புடன் பின்வருமாறு கூறலாம். மனிதனின் உடலானது ஒவ்வொரு நாளும் சிலபல மாற்றங்களைத் தோற்றுவிக்கும். நேற்று இருந்தாற்போல இன்று இருக்காது. நாளை வேறுவிதமான மாறுதல்களைக் கொண்டிருக்கும். அவ்வாறு இருக்கும் போக்கை காட்சிப்படுத்தும் நரிஉருத்தலையார், மனிதனே! வயது செல்லச் செல்ல தலைமுடியினுடையத் தன்மை மீனின் முள்ளைப் போன்று நிறம் மாறிவிடும். தோல், கன்னம் சுருங்க ஆரம்பித்துவிடும். எப்போது வேண்டுமானாலும், எமன் தனது பாசக்கயிறு கொண்டு உயிரை எடுக்க வரலாம். அப்போது சங்கடப்பட்டு புண்ணியம் இல்லை. ஆகவே பிறருக்கு உன்னால் முடிந்த நல்லதைச் செய். இல்லையேல் பிறர் வாழ்வைக் கெடுக்காதே என்கிறார். இதை,

"**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**" - (புறம் 195)

என்னும் புறநானூற்றுப் பாடல் தெளிவுப்படுத்துகிறது. இவ்வாறாக தமிழ் நாகரிகம், பண்பாடு ஆகியவை மனிதனை மாற்றியமைக்க காரணமாயிருந்துள்ளதை அறியமுடிகிறது.

**பக்திநெறி :**

ஏதோ நதிபோல ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய மனிதனின் அசுர வளர்ச்சியில் பக்திமையானது இன்று மிகவும் குன்றிவிட்டது. கடவுளால் உருப்பெற்ற மனிதன், எதையும் தன்னால் சாதிக்கமுடியும் என்று நினைத்ததன் விளைவு,'பாவம்' தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. ஆனால், தமிழையும்





ஆன்மீகத்தையும் இறையடியார்கள் எவ்வாறு போற்றி ஒழுகினார்கள் என நோக்கும்போது மெய்யாகவே இயற்கையோடும், இறைவனோடும் ஒன்றி இருந்திருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. இதனை,

"**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமச்சிவாயமே**"

என்கிறது தேவாரப் பாடல். இன்னும் கூடுதலாய் குலசேகர ஆழ்வார் எனக்கு ஊர் வேண்டாம், உலகம் வேண்டாம், மண், பொன், பெண் எதுவும் வேண்டாம். நீ (இறைவன்) இருக்கும் இடத்தில் ஒரு மீனாய்ப் பிறக்க எனக்கு வரம்தா என்று வேண்டுகிறார். இப்படி இறைவனை இடைவிடாது வேண்டுகின்றபோது நமக்கு துன்பம் நேராது. யாருக்கும் அஞ்சி நடுங்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் ஈசனே பார்த்துக் கொள்வான் என்கிறார். இவர்களில் சற்று வித்தியாசமாக, மனிதனே இறைவன், மனிதனுக்குச் செய்யும் தொண்டு இறைவனுக்கு ஏற்புடையதாய் திகழும் என்று மனிதத் தொண்டே மகத்துவம் நிறைந்தது என்பதோடு, ஒருவன் பிச்சை கேட்கிறான், உதவி செய்பவன் வயதில் சிறியவனாய் இருப்பினும், உதவியைப் பெறுகிறவன்,"நீ நன்றாக இருக்க வேண்டும்" என்று கை கூப்பி வணங்குவதைத் திருமூலர்,

"**அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்**
**அன்பே சிவமானது ஆரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே**"

என்று அன்பு வேறு, சிவம் வேறு அல்ல. உதவி செய்பவனே, பலன் பெறுகிறவனுக்கு சிவனாகிறான் என்கிறார். இதேபோன்று பார்வையற்ற ஆங்கில அரும்புலவன் மில்டன் இறைவனை எண்ணி கீழ்க்கண்டவாறு கண்ணீர் வடிக்கிறார்,

**ஒளி இழந்த வாழ்க்கையை எண்ணி விம்முகிறேன்**
**"ஒளி இழந்த வாழ்க்கையை எண்ணி விம்முகிறேன்**
**பரந்த உலகில் பார்வையின்றி பாதி வாழ்நாள் பரிதவித்தேன்**
**இனி இருப்பதெல்லாம் மீளாத் துயில்**
**பயனற்ற வாழ்விலும், உயிருள்ளவரை**
**என் ஆண்டவனுக்கு அயராது பணிசெய்வேன்**
**அதுவே பிறவிக்கடன்"**

என்று மனமுருகிப் பாடுகிறார். இவ்வாறு பக்திநெறியைப் போற்றி வளர்த்த இலக்கியங்கள் நம்மையும் பக்குவப்பட, பண்புள்ளவர்களாய் மாற அழைப்பு விடுக்கின்றது.

**நடைமுறையில் பின்பற்றக்கூடிய மனித மதிப்பீடுகள் :**

அன்றாடம் நம் செயல்பாடுகளில் பின்பற்றக்கூடிய நீதிநெறிகள் ஏராளம் இருக்கிறது. குறிப்பாக ஔவையாரின் பாடல்களை நாம் சிறுவயதிலிருந்தே நன்கு அறிந்து தெளிந்திருக்கிறோம். அவற்றுள் சிலவற்றை மட்டும் பின்பற்றினாலே இவ்வகிலத்தில் பயனுள்ள மனிதர்களாய் மறுமலர்ச்சி பெற முடியும்.

**"அறஞ் செய விரும்பு,**
**ஆறுவது சினம்**
**ஊக்கமது கைவிடேல்**
**ஏற்பது இகழ்ச்சி**
**ஓதுவது ஒழியேல்**
**தந்தை தாய்ப் பேண்**
**நன்றி மறவேல்**
**இணக்கம் அறிந்து இணங்கு**
**கெடுப்பது ஒழி"**

எனப் படிக்கப் படிக்க தன்னைத்தானே சீர்ப்படுத்திக் கொள்ளும் போக்கு இலக்கியங்களில் காணக்கிடக்கிறது. இதனைப் பின்பற்றினாலே மேன்மக்களாய்த் திகழலாம் என்பது திண்ணம்.

**முடிவுரை :**

மனிதனாய் இவ்வுலகில் பிறப்பது பெரிதல்ல. பிறந்தபிறகு வாழ்ந்ததற்கான எச்சங்களே வரலாறுகளாய் மிளிர்கிறது. இந்த வெளிச்சப்பாடுகள் பிரகாசிக்கப்பட இலக்கியங்களே பேருதவி புரிகின்றன என்பதை இக்கட்டுரைவழி அறியமுடிகிறது.